# தி.மு.க. உறுதியான அடித்தளத்தில் இருப்பது மட்டுமல்ல -

# இந்திய அரசியலில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தீர்மானிக்கும் சக்தியாகத் திகழ்கிறார்!

## ‘இந்தியா டுடே’ இணையதள இதழில் சிறப்புக் கட்டுரை!

**சென்னை, மே 27 -**

**வரும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு. கழகம் உறுதியான அடித்தளத்தில் இருப்பது மட்டுமல்ல; இந்திய அரசியலில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனக்கென ஒரு பலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளதாகவும் ‘இந்தியா டுடே’ இணையதள இதழில் பத்திரிகையாளர் கவிதா முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.**

**அந்தக் கட்டுரையில், பாரம்பர்யம் மற்றும் அதிகார வல்லமையைக் குறிக்கும் வகையில் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது முழுப் பெயரை கொண்டுள்ளார் என்றும்; நலத்திட்டங்களாலும், கூட்டாட்சி நிலையாலும் தி.மு.க. வலிமையாக உள்ளது என்றும்;**

**அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி வாக்கு வங்கி மற்றும் அரசியல் ஒத்திசைவு இல்லாமையால் தடுமாறுகிறது என்றும்; குறிப்பிட்டுள்ளார்.**

‘தமிழகத்தின் போர்க்களம்: ஸ்டாலினின் தி.மு.க. ஏன் முன்னணியில் உள்ளது?’ என்ற தலைப்பில் இந்தியா - டுடே இணைய இதழில் கவிதா முரளிதரன் வெளியிட்டுள்ள கட்டுரை வருமாறு:-

மே 7, 2021 அன்று மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பதவி யேற்றபோது, அவர் தன்னை - தனது நீண்ட பொது வாழ்க்கையில் முதல்முறையாக - “முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்” என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, மரபுக்கு அது வெற்றுப் பிரமாண்டமாகத் தெரியவில்லை.

அடுத்த சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடம் மட்டுமே உள்ள நிலையில், தி.மு.க. (திராவிட முன்னேற்றக் கழகம்) உறுதியான அடித்தளத்தில்




இருப்பது மட்டுமல்லாமல், இந்திய அரசியலில் ஸ்டாலின் தனக்கென ஒரு பலத்தை உருவாக்கியுள்ளதாகவும் கூறலாம்.

நலன்புரி, குறியீட்டுவாதம் மற்றும் கூட்டாட்சி எதிர்ப்பு ஆகியவற்றின் கலவையானது உள்ளூர் நிர்வாகம் மற்றும் உண்மையான அரசியலின் எல்லைகளுக்கு அப்பால் அவரது முத்திரையை எடுத்துச் செல்கிறது. ஸ்டாலினின் அந்த பெரிய அரசியல்-சித்தாந்த ஒளியுடன், ஒரு யூகத்தை ஏற்படுத்தினாலும், தமிழ்நாடு முற்றிலும் சீரமைக் கப்பட்டதாகத் தெரிகிறது.

எதிர்க்கட்சிகளிடம் ஒரு ஒத்திசைவான வாதம் இல்லை. அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி அதிக இழுபறியுடன் வருகிறது. 2024 ஆம் ஆண்டில் 41 சதவீத வாக்குகளைப் பெற்றதன் மூலம், சுமார் 13 மக்களவைத் தொகுதிகளில் தி.மு.க. கூட்டணியை விட முன்னணியில் இருந்ததன் மூலம், 2023 கருத்து மாறுபாட்டுக்குப் பிறகு அவர்கள் கூட்டணி அமைத்தனர்.



கட்டுரையாளர் கவிதா முரளிதரன்

ஆனால் தமிழக அரசியல் எளிய கணிப்பில் இயங்குவதில்லை. பா.ஜ.க.வுடன் பிரிந்ததால் அ.தி.மு.க.வின் வாக்குகள் அதற்கு உறுதியளிக்கப்பட்டதாகக் கூறலாம். 2026 தேர்தல் நெருங்கி வருவதால், எல்லை நிர்ணயம் அல்லது மொழி போன்ற கருப்பொருள்களில் தி.மு.க.வின் நிலைப் பாடுகளை எதிர்க்க முடியாது. வடக்கத்திய திணிப்புகளுக்கு ஆழ்ந்த ஒவ்வாமை கொண்ட ஒரு அரசியல் கலாச்சாரத்தில், இந்தப் பிரச்சினைகளில் பா.ஜ.க.வுடன் நீந்துவது பேரழிவைத் தேடுவதற்குச் சமம் என்றுதான் கூற வேண்டும்.

நிச்சயமாக, அந்த வைல்ட்கார்ட் நடிகர் விஜய் தான். அவரது அரசியல் தொடக்கமான தமிழக வெற்றிக் கழகம் (டி.வி.கே.), ஆரம்பகால ஆர்வலர்களை - குறிப்பாக இளைஞர்களிடையே - ஈர்த்துள்ளது, ஆனால் தேர்தல் ரீதியாக சோதிக்கப்படவில்லை. அதுவும் தவிர உதயநிதி ஸ்டாலினால் தி.மு.க. விற்கு அதன் சொந்தமான ஈர்ப்பு உள்ளது. எனவே பாதிப்புக்கு வாய்ப்பில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஸ்டாலினிடம் தலைமைத்துவம் மிகவும் உள்ளது. “தமிழ்நாடு கூட்டாட்சிக்கு வழிவகுத்தது,” என்று எழுத்தாளர் மற்றும் தி.மு.க. ஊடகப் பிரிவின் இணைச் செயலாளரான சல்மா கூறுகிறார்.



‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்’ என்று உறுதிமொழியெடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.05.2021 அன்று பதவி ஏற்ற காட்சி!

“கூட்டாட்சி ஒற்றுமைக்கான வலுவான, தெளிவான குரல் முதலில் இங்குதான் எழுப்பப்பட்டது - நமது முதல்வர் அதற்கு தேசிய கவனத்தை ஈர்த்தார், மற்ற மாநிலங்களில் விழிப்புணர் வையும் ஒற்றுமையையும் உருவாக்கினார்.” என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீட் (தேசிய மருத்துவ நுழைவுத் தேர்வு), இந்தி ‘திணிப்பு’, ஆளுநரின் தலையீடு, தி.மு.க.வை இன்னும் உத்வேகமாக உள்ள ஒரு இயக்கமாகக் காட்டுதல் போன்ற பிரச்சினைகளில் பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசுக்குக் கடுமையான எதிர்ப்பை வழங்கும் ஒரு வல்லமை மிக்க கட்சியாக தி.மு.க. காட்டி வருகிறது. இதை எதிர்த்துப் பார்க்கும்போது, அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணி தி.மு.க. வை எதிர்கொள்ளும் அளவுக்கு ஒரு தமிழக வெற்றிக் கழகம் வாக்குகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் எங்கே இருக்கிறது? ஸ்டாலினின் முழுப் பெயரை விட அவரது கட்சியின் செல்வாக்கு நீளமானது.

இவ்வாறு அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### தேசிய பங்குச் சந்தையில் பட்டியலிடப்படும் சென்னை மாநகராட்சியின்

# ரூ.200 கோடி மதிப்புள்ள நகர்ப்புர நிதிப் பத்திரங்கள்!

## மணி ஒலித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, மே 27 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.5.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் 200 கோடி ரூபாய் மதிப்புள்ள நகர்ப்புர நிதிப்பத்திரங்களை தேசிய பங்குச் சந்தையில் பட்டியலிடும் நிகழ்வினை (Listing Ceremony of “GCC Municipal Bonds” on National Stock Exchange) மணி ஒலித்து தொடங்கி வைத்தார்.

நகர்ப்புர உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு தேவைப்படும் நிதிக்காக பல்வேறு நவீன நிதி திரட்டும் முன்னெடுப்புகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இந்த முயற்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி நகர்ப்புர நிதிப் பத்திரங்கள் மூலம் உட்கட்டமைப்பு திட்டத்திற்கு நிதி திரட்டியது ஒரு முக்கிய நிகழ்வாகும்.

**மிகக் குறைந்த வட்டி விகிதம்!**

பெருநகர சென்னை மாநகராட்சி 10 ஆண்டு காலத்திற்கு, ஆண்டுக்கு 7.97% என்ற மிகவும் குறைந்த வட்டி விகிதத்தில் 200 கோடி ரூபாய் நகர்ப்புர நிதிப் பத்திரங்களை வெற்றிகரமாகத் திரட்டியது. 2025 ஆம் ஆண்டில் இந்தியாவில் இதுவரை வெளியிடப்பட்ட நகர்ப்புர நிதிப் பத்திர வெளியீடுகளிலும் இதுவே மிகக் குறைந்த வட்டி விகிதமாகும் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த வெளியீட்டுக்கு முதலீட்டாளர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு கிடைத்துள்ளது. அதன்படி 100 கோடி ரூபாய் அடிப்படை வெளியீட்டுத் தொகையை விட 4.21 மடங்கு அதிகமாக, அதாவது 421 கோடி ரூபாய் மதிப்பிலான ஏலங்கள் தேசிய பங்குச் சந்தையின் மின்னணு ஏலம் மூலம் பெறப்பட்டன. இது பெருநகர சென்னை மாநகராட்சியின் வலுவான நிதி மேலாண்மை மற்றும் திட்டத்தின் கட்டமைப்பிற்கு முதலீட்டாளர்கள் மத்தியில் உள்ள வலுவான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

**மழை நீர் சேமிப்பு!**

இந்த நகர்ப்புர நிதிப் பத்திரங்கள் மூலம் திரட்டப்பட்ட நிதி, கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைப்பிற்கு (ISWD) பயன்படுத்தப்படும். இது சென்னையின் வெள்ளத் தடுப்பு மற்றும் நிலையான நகர்ப்புர வளர்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முக்கியமான உட்கட்டமைப்பு திட்டமாகும்.

கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் 8 பெரிய ஏரிகளும், 71 சிறிய நீர்நிலைகளும் உள்ளன. இந்த ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டுமானம் 46 தொகுப்புகளாக (Packages) மேற்கொள்ளப்பட்டுள்ளன. 22.05.2025 அன்றைய நிலவரப்படி, 30 தொகுப்புகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 16 தொகுப்புகளுக்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் நீர் சேமிப்புத் திறனை இரட்டிப்பாக்கி, பருவமழையின் போது மழைநீர் தேக்கத்தைத் தடுக்கவும், கோடைக் காலத்தில் நீர் பற்றாக்குறையைச் சமாளிக்கவும் உதவுகிறது. மழைநீர் வடிகால்கள் அருகிலுள்ள ஏரிகளுடன் இணைக்கப்படுவதால், அதிகப்படியாக வெளியேறும் மழைநீர் சேமிப்பிற்காக ஏரிகளுக்கு திருப்பி விடப்படுகிறது.

**சிறப்பு நிதி உதவி!**

பெருநகர சென்னை மாநகராட்சியின் நகர்ப்புர நிதிப் பத்திரங்களுக்கு இந்தியா ரேட்டிங்ஸ் மற்றும் அக்யூட் ரேட்டிங்ஸ் ஆகிய இரு நிறுவனங்களும் ‘AA+’ என தரமதிப்பீடு செய்துள்ளன. இது பெருநகர சென்னை மாநகராட்சியின் சீரிய நிதி மேலாண்மையை எடுத்துக்காட்டுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியை ஊக்குவிக்கும் நோக்கத்திலும், முதலீட்டாளர்களின் நம்பகத் தன்மையை வலுப்படுத்தும் விதமாகவும் தமிழ்நாடு அரசு PSGF (Project Sustainability Grant Fund) திட்டத்தின் கீழ் சிறப்பு நிதி உதவியை ஏற்படுத்தியுள்ளது.

கூடுதலாக, ஒன்றிய அரசின் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் நகர்ப்புர நிதிப் பத்திர வெளியீட்டு ஊக்கத்தொகையாக மாநகராட்சிக்கு 26 கோடி ரூபாய் ஊக்கத்தொகையும் பெறப்படும். இது நகர்ப்புர நிதிப் பத்திரங்கள் மூலம் நிதியினைத் திரட்டும் செலவினை மேலும் குறைத்திட உதவும்.

முன்னதாக, முதலமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் 200 கோடி ரூபாய் மதிப்புள்ள நகர்ப்புர நிதிப்பத்திரங்களை தேசிய பங்குச் சந்தையில் பட்டியலிடும் விழாவில், பத்திர வெளியீட்டின் அனைத்து பங்கு முகவர்களுக்கும் நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவா கத் துறை அமைச்சர்

கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர்

திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தேசிய பங்குச்சந்தை தலைமைப் பொருளாதார வல்லுநர் டாக்டர் தீர்த்தங்கர் பட்நாயக், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், முதலீட்டாளர்கள், பங்கு முகவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரையில் வருகிற 1ஆம் தேதி கழகப் பொதுக்குழு கூட்டம் நடைபெறுவதையொட்டி அதற்கான பிரம்மாண்டமான அரங்கம் அமைக்கும் பணிகளை மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் சேடபட்டி மு.மணிமாறன், ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., கழக எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியன், சோமசுந்தர பாண்டியன், கரு.தியாக ராஜன், ஜி.பி.ராஜா, மூவேந்திரன், அழகு பாண்டி, சம்மட்டிபுரம் கணேசன்,அக்ரி கணேசன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.

---

### திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி

# நலஉதவிகளுடன் வருடம் முழுவதும் கலைஞர் பிறந்த நாள் விழா!

## பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, மே 27 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளாம் செம்மொழி நாளையொட்டி, மக்களுக்குத் தேவையான நல உதவிகளுடன் கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி பொதுக்கூட்டங்கள் நடத்திடுவீர் என்று திருவண்ணாமலை மாவட்ட கழக நிர்வாகிகளுக்கு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

தமிழே உயிராக தமிழினமே உணர்வாக, தமிழர்நலனும் தமிழ்நாட்டு வளர்ச்சியுமே வாழ்நாள் செயல்திட்டமாக கொண்ட ஓய்வில்லா சூரியன்.



தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரர். ஒரு நூற்றாண்டு கால திராவிட இயக்க வரலாற்றில், முக்கால் நூற்றாண்டு கால பங்களிப்பாளர். அரை நூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்து, தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவர். களம் கண்ட 13 தேர்தல்களில் வெற்றி கண்ட சாதனையாளர். ஐந்து முறை தமிழ்நாட்டின் முதல்லமைச்சராக பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவர்.

இந்திய ஜனநாயக காவலராக திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர். இலக்கியம், கவிதை, இதழியல், நாடகம் மற்றும் திரைப்படம் என தொட்டத் துறைகளை அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முக திறன் கொண்ட படைப்பாளர். திருக் குவளையில் பிறந்து திருவாரூ ரில் வளர்ந்து உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளாம், செம்மொழி நாளை முன்னிட்டு

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, கிளை கழக நிர்வாகிகளும், அணி சார்ந்த அமைப்பின் நிர்வாகிகளும், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை, மரம் நடுதல், இரத்த தானம் செய்தல், நீர் நிலைகளை செப்பனிடுதல், ஜூன் 3 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல், மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல், கழக கொடியேற்றுதல், இனிப்பு வழங்குதல் மற்றும் பொதுமக்களுக்கு உதவும் வகையில் நல உதவிகளுடன், கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி பொதுக்கூட்டங்களை நடத்துதல் என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளாம், செம்மொழி நாளை, ஆண்டு முழுவதும் எழுச்சியாக கொண்டாடிட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கூறியுள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்டம், காட்பாடி சட்டமன்றத் தொகுதி வாலாஜா ஊராட்சி ஒன்றியம், சீக்கராஜபுரம் ஊராட்சி, பெல் அண்ணா நகரில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுளள நியாய விலைக் கடை கட்டடத்தை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை பா.ஜெயசுதா, ஒன்றியக் குழுத் தலைவர் சேஷா வெங்கட்ரமணன், முகுந்தராயபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் முருகன், ஒன்றியக் குழு துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் செல்வம், ஊராட்சி மன்றத் தலைவர் சியாமளா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.